**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10029

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.11.2025

Accepted: 28.12.2025

Published: 01.01.2026

Citation:
Nilanthini Senthuran. "The Visit of the British Colonial Secretary to Batticaloa and Its Significance – A Historical Study." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 12–19.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10029

*Corresponding Author:
nilanthinic@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Visit of the British Colonial Secretary to Batticaloa and Its Significance – A Historical Study

**Mrs. Nilanthini Senthuran**
*Senior Lecturer, Department of History*
*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*
*http://orcid.org/0009-0002-7184-1328*

**Abstract**

*This study examines the visit of the British Colonial Secretary B. H. Bourdillon and his wife to the Batticaloa District in 1930 and it highlights the administrative, socio-economic, and political significance of the visit in the history of the Eastern Province. The primary sources such as Government Gazette notifications, correspondence of district officials, colonial administrative records, and contemporary reports were used to this research to analyse the objectives, events, and outcomes of the visit.*

*The study states that Bourdillon's visit was not merely ceremonial but represented a calculated administrative intervention which aimed to strengthen the colonial authority and to review the district-level governance. The key sectors such as agriculture and irrigation-tank development, public health facilities, construction and rural infrastructure, and administrative restructuring were given priority. The visit also provided importance for public engagement. Petitions and requests from local communities were considered. Discussions were held with sectoral officers including police, public works, railways, forests, survey, excise, and education.*

*The arrangements, decorations, and inter-departmental coordination undertaken for the event, indicate the political weight placed on the visit by the colonial administration. The findings reveal that the visit served to evaluate the needs of the district, to reinforce economic policies and to maintain the direct administrative control over the Eastern Province. By filling a significant gap in the existing literature, this research helps to understand how official colonial tours shaped local governance, resource management, and policy implementation in Sri Lanka's eastern region during British rule.*

***Keywords:*** *Colonial Administration, Batticaloa District, Colonial Secretary, Development*

**References**

1. Letters of the official visit of His Excellency Sir Bourdillon
2. Letters of the Harrison -Jones, Esquire C.C.S, Government Agent, Eastern Province
3. Letters of Hony. Secy Village Committee (Proctor) J.T. Thambirajah
4. The Ceylon Government Gazette (1930/09/06), Government Press, Colombo.
5. Letters from J.S.T. Vethanayagam, Managing Proprietor of Ceylon Chronicle Press, Batticaloa
6. Invitation from G.W. Vallipuram, Hony. Secretary, Reception Committee, Batticaloa
7. Other Colonial records from the National Archive, Colomo: File 46/250

# பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் மட்டக்களப்பு வருகையும் அதன் முக்கியத்துவமும் – ஒரு வரலாற்றாய்வு

***நிலாந்தினி செந்தூரன்***
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*இவ்ஆய்வு, 1930 ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவச் செயலாளர் பி. எச். போர்டிலன், அவரது மனைவி ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேற்கொண்ட பயணத்தை, கிழக்கு மாகாணத்தின் நிர்வாக, சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் வரலாற் றுப் பின்னணியில் ஆராய்கிறது. அரச வர்த்தமானி அறிவிப்புகள், மாவட்ட அரசாங்க அதிகாரிகளின் கடிதங்கள், காலனித்துவ நிர்வாக பதிவுகள் மற்றும் சமகால அறிக்கைகள் போன்ற முதன்மை ஆதாரங்களை பயன்படுத்தி, இவ்வருகையின் நோக்கம், நிகழ்வுகள் மற்றும் விளைவுகள் ஆராயப்பட்டுள்ளன. போர்டிலனின் வருகையானது ஒரு விழாவாக மட்டுமல்லாமல், காலனித்துவ அதிகாரத்தை வலுப்படுத்தவும், மாவட்ட நிர்வாகத்தின் செயற்திறனை மதிப்பிடவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக நடவடிக்கையாகும். விவசாயம் மற்றும் நீர்ப்பாசனக் குள அபிவிருத்தி, சுகாதார வசதிகள், கட்டுமானம், கிராமிய உட்கட்டமைப்பு முன்னேற்றம், நிர்வாக மறுசீரமைப்பு ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன. மேலும், பொதுமக்களின் மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் துறைத்தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள், மக்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் நிர்வாகத்துடன் அவர்களின் தொடர்பை வெளிப்படுத்துகின்றன. இவ்வருகைக்காக மேற்கொள்ளபட்ட விரிவான அலங்கார மற்றும் அனைத்துத்துறைச் செயற்பாடுகள், காலனித்துவ ஆட்சியால் வழங்கப்பட்ட அரசியல் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. முக்கியமாக, இவ்வருகை மாவட்டத் தேவைகளை மதிப்பிடவும், பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தவும், கிழக்கு மாகாணத்தில் காலனித்துவ கட்டுப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது என்பதை அறியமுடிகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *காலனித்துவ நிர்வாகம், மட்டக்களப்பு மாவட்டம், காலனித்துவச் செயலாளர், அபிவிருத்தி*

## அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவச் செயலாளர் மற்றும் அவரது மனைவி பி. எச். போர்டிலன் அவர்களின் மட்டக்களப்பு வருகையானது முக்கிய வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றாகும் (1930). இவ்வருகை மாவட்டத்தின் நிர்வாக மாற்றங்கள், விவசாயப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி, நீர்ப்பாசனக் குளங்கள் தொடர்பான விருத்தி, சுகாதரா வசதி வாய்ப்புக்கள், கட்டுமான உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் கிராமிய நிர்வாக அமைப்புகளின் சீரமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக அமைகின்றது. காலனித்துவ அதிகாரிகளின் குறிப்புக்கள், அரசாங்க வர்த்ததானி அறிவித்தல்கள், மாவட்ட அதிகாரிகளின் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகைக்கான பிரதான நோக்கம், அதன் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை வரலாற்றுப் பார்வையில் இவ்ஆய்வுக் கட்டுரை ஆராய்கின்றது.

## ஆய்வின் நோக்கங்கள்

- பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகை குறித்த முதன்மை ஆவணங்களைச் சேகரித்தல்.
- வருகையின் போது நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை வரலாற்று ரீதியாக பகுப்பாய்வு செய்தல்.
- காலனித்துவச் செயலாளரின் வருகையால் சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்களை ஆராய்தல்.

## ஆய்வுப் பிரச்சினை

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் மட்டக்களப்பு வருகை குறித்துச் சமகால இலக்கியங்களிலோ அல்லது ஆய்வுகளிலே குறிப்பிடப்படாத நிலையில் ஆய்வு இடைவெளி புலப்படுகின்றது. காலனித்துவ செயலாளரின் வருகை குறித்து பல வினாக்கள் இயல்பாக எழுகின்றன. குறிப்பாக ஆளுநரின் பயண திட்டம், இந்த வருகை ஏன் முக்கியமானதாகக் கருதப்படுகிறது, அவர் சந்தித்த நிர்வாகிகள், நிகழ்த்திய முடிவுகள். கல்வி, நில நிர்வாகம், வன உரிமைகள், சட்ட அமுலாக்கம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், உள்ளூர் மக்களின் எதிர்வினைகள் (பத்திரிகை அறிக்கைகள், கடிதங்கள், மனுக்கள்) போன்ற வினாக்களை ஆய்வுப் பிரச்சினையாகக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப் படுகின்றது.

## ஆய்வின் கருதுகோள்

கௌரவ பிரித்தானிய காலனித்துவச் செயலாளர் பி. எச். போர்டிலன் அவரது மனைவியான மட்டக்களப்பு வருகையானது முக்கிய வரலாற்று நிகழ்வாகும்.

## ஆய்வு அணுகுமுறை

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகை குறித்து எதுவித ஆய்வுக் கட்டுரைகளோ குறிப்புகளோ அற்ற நிலையில், கொழும்பு தேசிய ஆவணச் சுவடிகள் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வரலாற்று அணுகுமுறையில் முன்னெடுக்கப்படும் இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் ஆராயப்பட்டுள்ளது.

## பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகைக்கான அழைப்பிதழும் பயணத் திட்டமும்

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகைக்கான அழைப்பிதழின்படி 1930 வைகாசி மாதத்தின் தொடக்கத்தில் கௌரவ போர்டில்லன் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான உத்தியோகபூர்வ பயணம், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட நிர்வாக முன்னுரிமைகளையும் சமூக-அரசியல் தொடர்புகளையும் வெளிப்படுத்துகின்றது. அவருடைய பயணமானது வைகாசி மாதம் 6ஆம் தேதி பதுளையிலிருந்து மட்டக்களப்பிற்கு பயணத்தைத் தொடங்கினார் மகா ஓயாவில் கிழக்கு மாகாண அரசாங்க அதிபரால் வரவேற்கப்பட்டார். இந்தப் பயணத்தில், உன்னிச்சைக் குளம் மற்றும் அதன் சுற்றுவட்ட வயல் நிலங்கள் போன்ற முக்கிய நீர்ப்பாசன மற்றும் வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இச்செயற்பாடு சமகாலத்தில் பிரித்தானிய நிர்வாகம், நீர்ப்பாசன விரிவாக்கத்திற்கும் விவசாய மேலாண்மைக்கும் அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

வில்காசிம் மண்டபத்தில் நடைபெற்ற பொது வரவேற்பும், பொதுமக்களுடன் நடைபெற்ற சந்திப்பும், உள்ளூர் சமூகத்துடனான நேரடி தொடர்புகளை வலுப்படுத்துவதற்கான அரசின் முயற்சிகளைப் பிரதிபலித்தன. 7ஆம் திகதி மாந்தீவு தொழுநோயாளர் இல்லம் போன்ற சுகாதார நிலையங்களின் ஆய்வு, காலனித்துவ

நிர்வாகத்தின் நலன்புரி அமைப்புகளுக்கான ஈடுபாட்டைக் காட்டுகிறது. கல்முனைப் பயணமும், அரசடி வெஸ்லியன் மிஷன் பயிற்சிக் கல்லூரியின் புதிய விடுதி கட்டிடத் திறப்பும், அரசாங்கம், மிஷனரி அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்தின. இறுதியாக, 8ஆம் தேதி பொலன்னறுவை நோக்கி புகையிரதம் மூலம் புறப்பட்டதனூடாக அவர்களது பயணம் நிறைவுற்றது.

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் இப்பயணமானது நிருவாக நடவடிக்கைகள், பொது வேலைகள் மற்றும் சமூக நிறுவனங்களைக் கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், மாவட்ட அதிகாரத்தை நிலைநிறுத்தவும் பிரித்தானிய நிர்வாகம் சுதேச தலைமைத்துவத்துடன் உறவுகளை உறுதிப்படுத்தவும் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகளாக இருந்ததை வெளிப்படுத்துகிறது.

### பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகைக்கான பாரம்பரிய முறையிலான விழா அலங்காரமும் நிதிச் செலவுகளும்

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் வருகையின்போது மேற்கொள்ளப்பட்ட அலங்காரச் செலவுகள், மட்டக்களப்பின் பாரம்பரிய அலங்கார முறைகளும், பிரித்தானிய காலனித்துவ நிர்வாக நிகழ்வுகளின் தேவைகளும் ஒன்றிணைந்த ஒரு சிறப்பான கலாசார முறையைப் பிரதிபலிக்கின்றன. தமிழர் பாரம்பரிய முறைப்படி பந்தல் அமைத்து அலங்கார வேலைப்படுகளை மேற்கொள்வதற்காக தென்னோலைகள், தென்னங்குருத்துக்கள், பனையோலைகள், பாக்கு மரங்கள், மூங்கில், கயிறு போன்ற இயற்கை வளங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அமிர்தகழி போன்ற பகுதிகளில் இருந்து இப்பொருட்கள் பெறப்பட்டன. உள்ளூர் தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரிய அலங்காரக் கலைகள் எவ்வாறு காலனித்துவ அரச நிகழ்வுகளில் பங்கு கொண்டன என்பதை அவ்வறிக்கையின் மூலம் புரிந்துகொள்ள முடிகின்றது.

கூலித் தொழிலாளர்களின் சம்பளம், மழைக்காலத்தில் அவர்களுக்கான உணவு மற்றும் சிறப்புப் பராமரிப்புச் செலவுகள் ஆகியவை மொத்தச் செலவில் முக்கிய பங்கினை வகித்தன. நாட்டுப்புற இசைக் கலைஞர்கள், இசைக்குழுவினர், வெள்ளைத் துணி விரிப்புக்கு அழைக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்களின் கட்டணங்கள் போன்றவற்றை ஆராய்கின்றபோது அனைத்துச் சமூகத்தவரின் பங்களிப்போடு இந்நிகழ்விற்கான ஒழுங்குபடுத்தல் வேலைகள் திட்டமிடப்பட்டிருந்தன. இத்தகைய விழாக்கள் அனைத்துப் பங்களிப்பால் சமூக இயக்கப்பட்டதை வெளிப்படுத்துகின்றன. அதனுடன் மின்விளக்குகள், அறிவிப்புகள் அச்சிடுதல், கொடிகள் வாடகைக்கு எடுப்பது போன்ற செலவுகள், காலனித்துவ ஆட்சியின் நவீன நிர்வாகத் தேவைகள் எவ்வாறு பாரம்பரிய விழாவில் இணைந்தன என்பதைக் காட்டுகின்றன. மேலும் அலங்காரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட விபரங்கள் மேல்வருமாறு அமைகின்றது.

பிரித்தானிய காலனித்துவ செயலாளரின் வருகைக்கான அலங்காரம் மற்றும் ஏற்பாடுகளின் செலவுத் தொகுப்பு

1. வில்காசிம் மண்டப மேலாளருக்கு 4 அறிவிப்பு பலகைகளுக்கான விளக்கு கள் மற்றும் விசிறிகள் - ரூ.20.00
2. நான்கு அறிவிப்பு பலகைகள் - ரூ.2.00
3. புளியந்தீவு மற்றும் கோட்டமுனை பகுதிகளில் போக்குவரத்து அறிவிப்புகள் மற்றும் நிகழ்ச்சி விவரங்கள் வழங்கல் - ரூ.1.00
4. தும்புத்தடி, கயிறு, நார் முதலியவை -ரூ.1.00

5. இசைக்குழுவினருக்கான (பேண்ட்ஸ்மென்) கூலி - ரூ.2.00
6. உள்ளூர் இசைக்கலைஞர்களுக்கான கொடுப்பனவு - ரூ.7.50
7. வெள்ளைத் துணிகள் பரப்பிய சலவைத் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு ரூ.2.50
8. வில்காசிம் மண்டப வளாகத்தை சுத்தம் செய்தல் - ரூ.2.00
9. குழிகள், பள்ளங்கள் நிரப்புதல் மற்றும் அமர்வு ஏற்பாடுகள் -ரூ.9.00
10. அச்சகம், நிகழ்ச்சி நிரல், போக்குவரத்து அறிவிப்புகள் அச்சிடுதல்- ரூ.17.50
11. மின்விளக்குகள் ஏற்பாடு ரூ.50.00
12. பந்தல் மற்றும் மண்டபப் பணிகளுக்கு 4 தொழிலாளர்கள் (4 நாட்கள்)-ரூ.24.00
13. காலனித்துவச் செயலாளரின் உருவப்படம் வரைய கொழும்பு பயணம் -ரூ.20.00
14. வட்டாலைப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட 500 முடிச்சு கொடி அலங்காரம்- ரூ.10.00
15. 7 யார் கடுஞ்சிவப்புத் துணி - ரூ.6.00
16. 4 அங்குல கம்பி ஆணி - ரூ.0.78
17. 6 டின் டாக்ஸ் - ரூ.3.00
18. 15 கலன் சாயம் - ரூ.3.00
19. ஒரு துண்டு கல்வனைஸ் வயர் - ரூ.0.23
20. 3 சீட் பின்கள் - ரூ.0.30
21. கால் கிலோ மா- ரூ.0.04
22. ஒரு பக்ட் நார்- ரூ.1.25
23. 6 டசின் கார்ட்போர்டு மட்டைகள் - ரூ.21.60
24. 2 டசின் பொன்நிறக் காகிதத் தாள்கள் - ரூ.7.20
25. 8 உருட்டு கிரேப் பேப்பர்- ரூ.2.40
26. 6 டசின் எண்ணெய் காகிதங்கள் -ரூ.3.60
27. 1 டசின் நீளமான அலங்காரத் தாள்கள்- ரூ.5.40
28. பெயின்ட் ஓவியத் தூள் -ரூ.1.00
29. பந்தல் கட்டுவதற்கான மூங்கில் கட்டைகள்- ரூ.1.00
30. 20 கொடிகளுக்கான வாடகை-ரூ.10.00
31. கூலித்தொழிலாளர்களின் கூலி - ரூ.61.25
32. 67 பவுண்ட் தும்புக் கயிறு - ரூ.5.40
33. தென்னங்குருத்து, இளநீர், தென்னோலைகள் போன்றவற்றை வெட்டுதல் மற்றும் கொண்டுவருதல் -ரூ.0.30
34. துணி, அலங்காரக் காகிதம், வண்ணத் தாள், டிசுக் கடதாசிகள் -ரூ.5.87
35. 30 பாக்கு பனைமரங்களை ஏற்றிப் பறிப்பதற்கான வண்டி வாடகை - ரூ.3.50
36. 200 தளங்கை இலைகள் சேகரித்தல் மற்றும் கொண்டுவருதல்- ரூ.6.00
37. மழைக் காலத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கிய 5 போத்தல் அரக்- ரூ.13.75
38. மழை காரணமாக 15 தொழிலாளர்களுக்கு உணவு-ரூ.4.50
39. ஒரு பைல் - ரூ.0.60
40. தேங்காய் எண்ணெய் - ரூ.0.30
41. தென்னங்குருத்து, பாளை, பனைமரக் கொத்து -ரூ.13.00
42. அமிர்தகளியிலிருந்து வெட்டிக் கொண்டு வந்த மரக்கட்டைகள், பனைமரங்கள் மற்றும் போக்குவரத்து -ரூ.20.50

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் மட்டக்களப்பு வருகையை முன்னிட்டு, பல உள்ளூார் நிறுவனங்கள் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டன. மட்டக்களப்பில் இல.19, மத்திய வீதியில் அமைந்திருந்த கத்தோலிக்க அச்சகத்தில், வெள்ளி காட் காகிதத்தில் 200 அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டன. இதற்கான செலவு ரூ. 2.50 ஆகும். மட்டக்களப்பு கத்தோலிக்க கிளப் ஒரு நாள் பயன்பாட்டிற்காக 39 நாற்காலிகளை வாடகைக்கு எடுத்து, ஒவ்வொரு நாற்காலிக்கும் 5 சென்ட் முற்பணமாகக்

கட்டியது. A.B. Methias De Silva & Co. நிறுவனம் 200அழைப்பிதழ்களுக்கானஉறைப்பையை ரூ. 6.00க்கு வழங்கியது. இவ்வாறு பதிவாகியுள்ள ஏற்பாடுகள், ஆளுநர் வருகையை மரியாதையாகவும்சிறப்பாகவும்நடைபெற உள்ளூர்வாசிகள் எடுத்த முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன.

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் பயணத்திற்காக அரசு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டன. நீர்வழிப் போக்குவரத்து ஒருங்கிணைப்பில் சுங்கச் சேகரிப்பாளர் (Collector of Customs) ஆளுநருக்காக 6ஆம் தேதி இரவு 9 மணிக்கு சுங்கப் படகை தயாராக வைத்துள்ளார். அதே நேரத்தில் மாவட்ட பொறியாளர் வழமையான படகுடன் மற்றொரு P.W.D படகையும் தயார் செய்ய அறிவுறுத்துகிறார். இது மட்டக்களப்பின் ஏரிக் கொள்கலன்கள் காரணமாக நீர்வழிப் பயணம் முக்கியமானதாக இருந்ததைக் காட்டுகிறது. ஆளுநரின் பயணம் உறுதியாக நடைபெற இரண்டு படகுகளும் ஏற்பாடாகியுள்ளன.

நிலப் போக்குவரத்து மற்றும் தொழில் நுட்ப விளக்கங்கள் குறித்து நீர்ப்பாசனப் பிரிவு பொறியாளர் ஆளுநருடன் மகா ஓயாவிலிருந்து மட்டக்களப்பு வரும்போது உன்னிச்சைத் திட்டம் மற்றும் Left Bank பகுதி குறித்து விளக்குவதற்காக அழைக்கப்பட்டார். இது நீர்ப்பாசன முறை, விவசாய மேம்பாடு, நீர்வள மேலாண்மை போன்றவை காலனித்துவச் செயலாளரின் பயணத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்ததைக் காட்டுகிறது.

### உன்னிச்சை நெல்வயல் வளர் சங்கத்தின் நினைவுப் பதிவும் கோரிக்கையும்

உன்னிச்சை நெல்வயல் வளர் சங்கம் சமர்ப்பித்த நினைவுப் பதிவில் (1930/06/4), மட்டக்களப்பு மாவட்ட நிலவுடைமையாளர்களான விவசாயிகள் வேளாண்மைப் பயிர்ச்செய்கையின்போது எதிர்கொண்ட சவால்களை வெளிப் படுத்து கிறது. அந்த ஆவணத்தில் நெல் பயிரிடுதலில் பல அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்கொண்டதாகவும், மாட்டுத்தீவனத்திற்கு ஏற்ற மேய்ச்சல் நிலங்களின் குறைபாடு, பாசன, பயிர் மேலாண்மை தொடர்பான ஆலோசனையை வழங்கக் கூடிய வேளாண்மை அதிகாரிகள் இல்லாமை, நெல்லின் சந்தை விலை குறைதல் போன்றவை குறிப்பிடத்தக்கன. உன்னிச்சைக் குளத்தின் நீர்ப்பாசன வரம்பு தொடர்பாகவும் சங்கம் பல குறைகளை முன்வைத்தது. சுமார் 20,000 ஏக்கர் நிலத்திற்குக் கட்டுப்பாட்டு பகுதி இருந்தபோதிலும், 11,500 ஏக்கர் நிலம் ஏலவே பயிரிடப்பட்டிருந்தாலும், போதுமான நீர் 3,492 ஏக்கருக்கு மட்டுமே கிடைத்தது. வலது கரை கால்வாயும் அதனுடன் தொடர்புடைய கிளைக் கால்வாய்களும், ஆற்றுப்பகுதிக்கான பாசன அமைப்பு நிறைவடைதல், தற்போது முற்றிலும் மழையை நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சுமார் 8,000 ஏக்கருக்கான நீர்ப்பாய்ச்சல் சிரமங்களைத் தவிர்க்கவும், 5,000 ஏக்கர் அரச காடுகளை நெற்செய்கைக்குத் தயாராக மாற்றும் வாய்ப்பையும் உருவாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அப்பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாவணம், சமகாலத்தில் உள்ளூர் வேளாண்மைத் தேவைகள் மற்றும் காலனித்துவ நீர்ப்பாசனத் திட்டமிடலின் வரம்புகள் இடையே இருந்த முரண்பாடு களைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

### மட்டக்களப்பு சுகாதார மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளின் வரவேற்பும் கோரிக்கைகளும்

மட்டக்களப்பு சுகாதார மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் வரவேற்பு உரை (1930/06/6), சேர் போர்டிலனின் முதல் வருகையை முன்னிட்டு அரசுக்கான விசுவாசத்தையும் மரியாதையையும்

வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில், வாரியம் பல முக்கிய உள்ளூர் கட்டமைப்பு தேவைகளை ஆளுநரிடம் முன்வைக்க இவ்வாய்ப்பைப் பயன்படுத்தியது. புளியந்தீவு மற்றும் கோட்டைமுனை ஆகியவற்றை இணைக்கும் முக்கிய பாலத்தின் விரிவாக்கம் மற்றும் மறுகட்டுமானத்துக்கு நன்றி தெரிவித்த அவர்கள், கல்முனை, திருகோணமலை, பதுளை ஆகியவற்றுக்கு செல்லும் பிரதானப் பாதையின் விரைவான விரிவாக்கத்தை அவசரத் தேவையாக முன்வைத்தனர். அத்தோடு பயணிகளின் வசதிக்காக இரவு போக்குவரத்து அஞ்சல் புகையிரதச்சேவை தொடங்கப்பட வேண்டும் என்றும், அது புகையிரதத் துறைக்கும் இலாபகரமாக அமையும் எனவும் பரிந்துரைத்தனர். தற்போதைய தபால் அலுவலகம் இருள் சூழ்ந்த பழமையான கட்டுமானத்தில் இயங்கி வருவதால், நகரின் அதிகரித்து வரும் தேவைகளுக்கு முற்றிலும் போதாமையாக இருக்கின்றது, புதிய, வசதிகளுடன் கூடிய கட்டிடம் அவசியம் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இந்த ஆவணம், உள்ளூர் நிர்வாக அமைப்புகள் காலனித்துவ பிரதிநிதிகளின் அதிகாரபூர்வ பயணங்களைப் பயன்படுத்தி, தங்களின் உள்கட்டமைப்புத் தேவைகளை முன்வைத்து அரசின் கவனத்தை ஈர்க்க முயன்ற விதத்தைப் பிரதிபலிக்கிறது.

### பிரித்தானிய காலனித்துவ செயலரின் பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்

பிரித்தானிய காலனித்துவச் செயலாளரின் பொது கூட்டம், 1930/06/6 அன்று மூன்று மணிக்கு இடம்பெற்றது. காலனித்துவ ஆட்சி அனைத்து துறைகளுடனும் தொடர்பை பேண முயன்ற நிர்வாக நடைமுறையை வெளிப்படுத்துகிறது. இந்த கூட்டத்திற்கு மதபோதகர்கள், நெற்பயிர்ச் செய்கையாளர்கள், வழக்கறிஞர்கள், முதன்மைத் தலைமை அதிகாரிகள் மற்றும் அவரின்கீழ் பதவி வகிப்போர், அரச அதிகாரிகள், காவல் துறை, நீதித்துறை, புகையிரதத்துறை, வனம், பொது பணிகள் துறை, நீர்ப்பாசனத் துறை, நில அளவைத் துறை, சிறைச்சாலைப் பொறுப்பாளர்கள், வருவாய் மற்றும் மதுபானக் கட்டுப்பாட்டு துறை, தபால் துறை ஆகியவற்றில் பணிபுரியும் பிரதிநிதிகளுக்கு அதிகார பூர்வமாக அழைப்புகள் அனுப்பப்பட்டன. அதேபோல் ஆசிரியர்கள், வேளாண்மைத் துறை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் இணைக்கப்பட்டனர். இத்தகைய விரிவான பங்கேற்பு, மாவட்டத்தின் முக்கிய நிர்வாக மற்றும் சமூக-பொருளாதார அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அதிகாரத்தை வலுப்படுத்தும் காலனித்துவ அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வகைக் கூட்டங்கள், கொள்கை அறிவிப்புகளைப் பரப்புவதற்கும், சுதேச தலைவர்களைக் கண்காணிப்பதற்கும், கிழக்கு மாகாணத்தில் தனது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்து வதற்கும் காலனித்துவ ஆட்சிக்கு ஒரு கருவியாகச் செயற்பட்டன.

### முடிவுரை

1930ஆம் ஆண்டு மாண்புமிகு பி. எச். போர்டிலன் அவர்களின் மட்டக் களப்பு வருகை, கிழக்குப்பகுதியின் காலனித்துவ நிர்வாக வரலாற்றில் முக்கிய திருப்பமாக அமைகின்றது. இவ்வருகை வெறும் பார்வையிடலாக மட்டுமல்லாது, நிர்வாகத்தின் செயற்திறனை மதிப்பிடவும், மேம்பாட்டு பணிகளை நேரடியாக ஆய்வு செய்யவும், காலனித்துவ ஆட்சியின் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட நிர்வாக நடவடிக்கை என்பதை வெளிப்படுத்து கிறது. முதன்மை ஆதார ஆவணங்களின் ஆய்வின் அடிப்படையில், விவசாயம் மற்றும் நீர்ப்பாசனக் குள அபிவிருத்தி, சுகாதார வசதிகள், கட்டுமான மற்றும்

கிராமிய உட்கட்டமைப்பு முன்னேற்றம், மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு போன்ற துறைகளில் முக்கிய மாற்றங்கள் நிகழ்வதற்கு வழிகோலியது. மேலும், மக்களின் கோரிக்கைகள், மனுக்கள், மற்றும் பொதுக்கூட்டங்கள் வழியாக வெளிப்பட்ட சமூகத்தின் எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் இவ்வாய்வில் தெளிவாக பதிவாகின்றன. நிகழ்விற்காக செய்யப்பட்ட விழா அலங்காரமும் பல துறைகள் இணைந்து மேற்கொண்ட ஏற்பாடுகளும், இவ்வருகைக்கு வழங்கப்பட்ட அரசியல் மற்றும் நிர்வாக முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. மொத்தத்தில், இவ்வருகை காலனித்துவ ஆட்சியின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் கருவியாகவும், நிர்வாகத் தேவைகளை மதிப்பிட்டுப் புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சாதனமாகவும் விளங்கியதெனலாம்.

**மூல நூல்கள்**

1. அவரது மாண்புமிகு சர் போர்டில்லன் அவர்களின் அதிகாரப்பூர்வ வருகை தொடர்பான கடிதங்கள்
2. ஹாரிசன்-ஜோன்ஸ், எஸ்க்வயர் சி.சி.எஸ், கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் அவர்களின் கடிதங்கள்
3. கவுரவ செயலாளர், கிராம குழு (ப்ராக்டர்) ஜே. டி. தம்பிராஜா அவர்களின் கடிதங்கள்
4. சிலோன் அரசாங்க வர்த்தமானி (1930/09/06), அரசாங்க அச்சகம், கொழும்பு.
5. பட்டிக்கலோா சிலோன் குரோனிக்கிள் பிரஸ்ஸின் நிர்வாக உரிமையாளர் ஜே.எஸ்.டி. வேதநாயகம் அவர்களிடமிருந்து வந்த கடிதங்கள்
6. பட்டிக்கலோா வரவேற்பு குழுவின் கவுரவ செயலாளர் ஜி.டபிள்யூ. வல்லிபுரம் அவர்களிடமிருந்து வந்த அழைப்பிதழ்
7. கொழும்பு தேசிய ஆவணகத்திலிருந்து பெறப்பட்ட பிற காலனித்துவ ஆவணங்கள்: கோப்பு 46/250